# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTARTION (EXTERNAL) - 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## BBA 23 – BUSINESS LAW

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) "கொடைமுனைவானது யாரை நோக்கிச் செய்யப்பட்டதோ அது அவரை உண்மையில் சென்றடையும் வரை அவரால் அதற்கான ஓர் ஏற்பினைச் செய்ய முடியாது." இக்கூற்றினை தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரங்காட்டி விளக்குக.

(ஆ) "ஏற்பானது கொடைமுனைந்தவனை (Offeror) சென்றடைய வேண்டும். ஆனால், தபால் மூலமான ஏற்பில் (Postal Acceptance) இவ்விதி பொருத்தமற்றது."

இக்கூற்றினை தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரங்காட்டி விளக்குக.

02. (அ) பொருள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 13 இன் கீழுள்ள மறைமுக நிபந்தனைகள் எவை? அவை எந்தளவுக்கு ஒரு விற்பனை தொடர்பில் முக்கியம் பெறுகின்றன?

(ஆ) மாதிரி மூலமான விற்பனையில் (Sale by Sample) காணப்படும் அவசிய நிபந்தனைகளும் கூறுகளும் எவை?

03. "மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் (PFO) 18ம் பிரிவின்படி, பங்குடமை உடன்படிக்கையானது கட்டாயம் எழுத்தில் இருக்க வேண்டும். பங்குடமையின் உருவாக்கம் தொடர்பில் இக்கூற்றின் பொருத்தம் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது பற்றி விரிவான விளக்கம் தருக. (தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆதாரமாகக் காட்டப்படுவது அவசியம்)

04. (அ) எவ்வாறான சூழ்நிலைகளில் முதல்வர் ஒருவர் தனது அதிகாரமின்றி முகவரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றினை உறுதிப்படுத்தலாம்?.

(ஆ) முகவராண்மை நியமனங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன? விசேட முகவர் நியமனம், பொது முகவர் நியமனம் ஆகிய இரண்டிற்குமிடையில் உள்ள வேற்றுமைகளைக் குறிப்பிடுக.

05. (அ) 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களின் பதவரிவையைத் தருக.

(ஆ) மாவட்ட நீதி மன்றத்தின் நியாயாதிக்கம் பற்றிக் குறிப்பு எழுதுக.

08. பின்வருவனவற்றுள் ஏதாவது **இரண்டுக்கு** மட்டும் சிறுகுறிப்பெழுதுக.

(அ) Balfour Vs Balfour
(ஆ) தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடமை
(இ) செல்வழி நிறுத்தல் உரிமை (Stoppage in Transit)
(ஈ) பராயமடையாதவர்களுடனான ஒப்பந்தம்

***